**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09042025-9014

Volume: 9

Issue: 4

Month: April

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 07.01.2025

Accepted: 23.03.2025

Published: 01.04.2025

Citation:
Vimalaraj, Alagiah. "'Paska' Theatre: Tamil Cultural Valus – Politics – Counter Politics." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 4, 2025, pp. 41–53.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i4.9014

*Corresponding Author:
vimalaraj72@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# 'Paska' Theatre: Tamil Cultural Valus – Politics – Counter Politics

**Dr. Alagiah Vimalaraj**
*Senior Lecturer, Deparment of Dance, Drama and Theatre Arts*
*Swamy Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0000-0002-0837-8839*

**Abstract**

*Paska is a theatrical form that tells the story of Jesus' suffering. It was introduced to the Tamils during the time of the Portuguese. From the time of its introduction, the Tamils adopted the form of Paska. They carried it out with Tamil cultural values. They transformed it into a Tamil Paska, incorporating an emotional belief and ritual into more than just a theatrical performance. Since this Paska system is based on the death of Jesus, most of the death rites among the Tamils are included in it. Anthropologists refer to this as 'Inculturation'. This research talks about these Tamil values. The institutionalized Catholicism that followed this system of Tamil culture did not fully accept it. So the Catholic Church banned the Paska and introduced a new type of Paska. Within the new system, anything related to Tamil culture was removed and the Paska was designed as a mere theatrical performance. The Paska system, which was a community Theatre, was later institutionalized. This article examines this trend of Paska with its contradictions.*

***Keywords:*** *Paska, Christianity, Drama, Theology, Criticism.*

**References**

1. The Holy Bible, (2016) Old Testament, Levier (Levi): 23: 5-6, Claretin Communications Chennai.
2. Ibid, Old Testament, Journey of Liberation (JL): 12: 21–23
3. Ibid, New Testament, The Gospel of John (GJ): 16: 41
4. Sivasubramanian. A., (2007) Christianity and the Tamil Environment, Vamsi Books, Thiruvennamalai.
5. Sivasubramanian.A., (2017) Tamil Christianity, Nagercoil.
6. Gandhimari. MS, (1992) Paska plays in Christian theaters in Tamil Nadu, Doctoral dissertation, University of Pondicherry, Pondicherry.
7. The Holy Bible, (2016) New Testament, The Gospel of Matthew (GM):27, 34 Claretin Communications Chennai.

# பாஸ்கா நாடகங்களில் தமிழர் பண்பாட்டுப் பெறுமானங்களும் அரசியல் – எதிர்அரசியல் சூழல்களும்

***அழகையா விமலராஜ்***
முதுநிலை விரிவுரையாளர், நடன நாடகத்துறை
சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***அறிமுகம்***
*பாஸ்கா என்பதைத் தமிழில் 'திருப்பாடுகளின் காட்சி' என்று குறிப்பிடுகின்றனர்.* "Pascha" *என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து 'பாஸ்கா' என்னும் சொல் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தில் இதை* "Passion Play" *என்று அழைக்கின்றனர். இதனைப் 'பாசுக்குவை' என்றும் அழைக்கின்றனர். கிறித்தவ இறையியல் சிந்தனையின் அடிப்படையில் இதற்குத் 'தியானத்தின் பயிற்சி' என்று பொருள்கொள்ளப்படுகிறது. இலங்கை, இந்திய நாடுகளில் இன்றும் இந்நாடகம் புழக்கத்தில் இருப்பதால் 'பாஸ்கு', 'பாஸ்' ஆகிய சொற்களால் மக்கள் இதனைக் குறிப்பிடுகின்றனர்.*
***முக்கியச் சொற்கள்:*** *நாடகம், பாஸ்கா, கிறிஸ்தவம், இறையியல், திறனாய்வு*

பழைய ஏற்பாட்டின்படி பாஸ்கா என்றால் இஸ்ரேயல் மக்களின் விடுதலையைக் குறிக்கின்றது. பாஸ்கா என்பதற்குக் 'கடத்தல்' (Pass over) என்று பொருள் கொள்ளப்படுகிறது. எகிப்தியர்களிடமிருந்து இஸ்ரேயல் மக்களை மோசே (மோயீசன் என்றும் கூறுவர். நம்பப்படும் காலம்: கி.மு 1391-1271) என்பவர் விடுவித்துக் கடத்திச்சென்ற நிகழ்ச்சியைக் 'கடத்தல்' என்கின்றனர். அந்த விடுதலை நாளைப் பண்டைய இஸ்ரேயல் மக்கள் வருடந்தோறும் பாஸ்கா விழாவாகக் கொண்டாடினர். இவ்விழா பல இடங்களில் பலவாறு கொண்டாடப்பட்டு வந்திருக்கின்றது.

பாஸ்கா விழாக்கள் கொண்டாடப்பட்டாலும் பாஸ்கா நாடக முறைமை ஐரோப்பிய நாடுகளில் 13ஆம் நூற்றாண்டில் தோற்றம்பெறத் தொடங்கியது. போர்த்துக்கேயர்கள் இந்த முறைமையை இந்திய இலங்கை நாடுகளுக்குக் கொண்டு வந்தனர். தொடக்க காலத்தில் பாஸ்கா நாடக முறைமை தமிழர்களின் கூத்து வடிவங்களை அடியொற்றி அதற்கேற்றால் போல் வடிவமைத்துக் கொண்டனர். அதன் பின்னர் கோவாவை மையமாக வைத்து வந்த பாதிரியார்களின் வழி நடத்தலில் பொம்மைப் பாஸ்கா என்று தமிழ் நாட்டிலும் உடக்குப் பாஸ்கா என்று இலங்கையிலும் புதிய வடிவம் தோற்றம் பெற்றது. மனிதர்கள் கூத்து வடிவில் ஆற்றுகை செய்த வடிவம் மாற்றப்பட்டு பொம்மைகளை வைத்து ஆற்றுகை செய்து இயேசுவின் பாடுகளை வெளிக்காட்டினர். இந்த இரு முறைமைகளிலும் தமிழர்களின் பண்பாட்டு அம்சங்கள் அதிகமாகவே இருந்தது. இயேசுவின் பாடுகள் என்பது ஒரு இறப்புச் சடங்கிற்கு ஒப்பானது. தமிழர்களின் இறப்புச் சடங்குகள் இதில் அதிகமாகவே பின்பற்றப்படுகின்றது.

இலங்கை இந்திய நாடுகளில் காலனிய ஆட்சிகளின் பின்னர் வத்திக்கானை மையப்படுத்திய பாதிரிமார்களின் வரவு அதிகமாகவேஏற்பட்டது. அதன்காரணமாக இவ்வாறான தமிழர் பண்பாட்டு அம்சங்கள்

நீக்கப்பட்டு மேற்கத்தேய நவீன நாடக முறைமைகளை உள்வாங்கிய நவீன நாடகக் கட்டமைப்புடன் கூடிய அதே நேரம் பண்பாட்டு அம்சங்கள் நீக்கப்பட்ட ஆற்றுகைகள் உருப்பெறத் தொடங்கின. பண்பாட்டு அம்சங்கள் கொண்ட பாஸ்கா முறைமைகள் தடைசெய்யப்பட்டன. பல இடங்களில் இந்தத் தடைக்கு எதிராகப் பல மக்கள் கிளர்ச்சிகளும் எழுந்தன. பல இடங்களில் பாஸ்கா இல்லாமலே ஆக்கப்பட்டது. சில இடங்களில் திருச்சபை விட்டுக் கொடுப்புக்களைச் செய்தது. எனவே, இச் செயற்பாடுகளின் அடிப்படையாகவே இந்த பாஸ்கா நாடகத்தை தமிழ்ப் பண்பாட்டின் அடியாகப் பார்க்க முற்பட்டிருக்கின்றது இந்த ஆய்வு.

**பண்பாடு ஏற்றல்**

நேரடியான அல்லது மறைமுகமான தொடர்பு மூலம் தனிநபர் அல்லது குழு இன்னொரு பண்பாட்டுச் சிறப்புப் பண்புகளைப் பெற்றுக்கொள்கின்ற நடைமுறையைப் பண்பாடு ஏற்றல் என்பர். சமயங்களும் பண்பாட்டின் கூறுகள்தாம். ஒரு சமயம் ஒரு பண்பாட்டிற்குள் இருக்கின்றது. இன்னொரு சமயம் இன்னொரு பண்பாட்டிற்குள் இருக்கின்றது. இந்த இரண்டு சமயங்களும் சமூக வாழ்விலே ஒரு பொதுவெளியில் சந்திக்கும்போது - இச்சமயங்களைப் பின்பற்றக்கூடிய மக்கள் சேர்ந்து வாழும்போது - கலந்து உழைக்கும்போது - கலந்து பழகும்போது அவர்கள் ஒரே சமயத்தினுடைய பண்பாட்டுக் கூறுகளை உள்வாங்கிக்கொள்வது தவிர்க்க முடியாததாகின்றது.

ஒரு பண்பாட்டினர் மற்றுமொரு பண்பாட்டினரின் நிலக் கூறுகளை உள்வாங்கிக்கொள்வதை Inculturation என்று மானிடவியலார் குறிப்பர். இக்கலைச் சொல்லே தமிழில் 'பண்பாடு ஏற்றல்' என்று குறிப்பிடப்படுகின்றது. கத்தோலிக்கத்தினர் பண்பாட்டு மயமாக்கல், தாயகமயமாக்கல், இந்தியமயமாக்கல் என்ற சொற்களைப் பயன்படுத்துகின்றனர். மானிடவியல் கலைச்சொல்லாகப் 'பண்பாடு ஏற்றல்' மாறிவிட்டது. இச்சொல் குறித்த ஓர் எளிய வரையறையை இராபர்ட் சத்திய சோசப் (2002) தந்துள்ளார். அது வருமாறு:

'நேரடியான அல்லது மறைமுகமான தொடர்புமூலம், தனிநபர் அல்லது குழு இன்னொரு பண்பாட்டுச் சிறப்புப் பண்புகளைப் பெற்றுக்கொள்கிற நடைமுறையே பண்பாட்டு ஏற்றலாகும்'

இவ்வரையறையையடுத்து, பண்பாடு ஏற்றலின் விளைவுகளை 'இது பண்பாட்டுச் சிக்கலையும் குழூஉத் தனித்தன்மையில் உருத்திரிபையும் ஏற்படுத்தும் சில நிலைகளில் இசைவிப்பையும் தோற்றுவிக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார். (சிவசுப்பிரமணியன். ஆ., 2017)

பண்பாடு என்பது மனிதர்களின் வாழ்க்கை முறையைக் குறிப்பது. தனிமனித வாழ்க்கை கட்டமைக்கும் சமயம் சார்ந்த நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்காசாரங்கள், விழாக்கள் ஆகியவற்றிற்கு மக்கள்கொள்ளும் அர்த்தங்களே மனிதக் குழுக்களின் முறையான பண்பாட்டைத் தீர்மானிப்பதில் முக்கியபங்கு வகிக்கின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகம் வந்த ஐரோப்பியர்களால் கிறித்தவம் பரவியபோது அச்சமயக் கொள்கைகள் அதை ஏற்றுக்கொண்டவர்களால் கடைப்பிடிக்கப்பட்டதோடு அதனிமித்தம் எழுந்த அவர்களது கலாசார மாறுபாடுகள் தங்களது தாய்ப்பண்பாட்டின் சாரத்தையும் உள்வாங்கியே அமைந்தன. இதனால் ஏற்பட்ட பண்பாடு ஏற்றல் என்பது கிறித்தவத்தின் தனிச் சிறப்பானதாக மக்களால் ஏற்கப்பட்டு இன்றுவரையிலான அதன் வளர்ச்சியில் பல்வேறு மாறுதல்களையும் கண்டுவருகின்றது.

ஏற்கெனவே தமிழகத்தில் பின்பற்றப்பட்டு வந்த பண்பாட்டு முறைமைகள் கிறித்தவத்தின் கலப்பால் புதியவடிவம் பெற்றன கிறித்தவச் சமயநெறிகளிலும் தமிழ்ப் பண்பாட்டின் சாயல்கள் தவிர்க்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்தின. எவ்வித நெகிழ்வும் தராத எந்தவொரு நிறுவனமும் நிலைபெற்றோங்க இயலாது என்பது சமயத்திற்கும் பொருந்தும்.

கிறித்தவத்தின் அடிப்படைக் கொள்கைகளில் எவ்வித மாற்றங்களையும் ஏற்காமல், உள்ளது உள்ளபடியே மக்களைக் கடைப்பிடிக்கச் செய்யும் நோக்கோடு பாதிரிமார்கள் செயற்பட்டனர். ஆனால் புதிதாகவந்த ஒரு சமயத்தை ஏற்றுக்கொண்ட மக்கள், அதனை ஏற்றுக்கொள்வதற்கு முன்பிருந்த பண்பாட்டை சமயச் சடங்கார்ந்த முறைமைகளை முற்றிலுமாக விட்டுவிட்டு புதிய சமயச்சடங்குகளை மட்டும் பின்பற்றுவதென்பது எளிதானவொன்றில்லை. எனவே அவர்களது வாழ்வியல் மரபுகளைத் தவிர்க்காமலே கிறித்தவத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றும் போதனைகள் ஆரம்பக்கால சமயப் பரப்புனர்களால் மேற்கொள்ளப்பட்டு அதன் பல பரிமாண மாற்றங்களால் இன்றுவரை பின்பற்றப்பட்டும் வருகிறது.

## தமிழ் பாஸ்கா பண்பாடுகள்

பாஸ்கா கத்தோலிக்கக் கிறித்தவர்களாலே பெரும்பாலும் நிகழ்த்தப்படுகின்றது. கத்தோலிக்கர்கள் அல்லாதவர்களால் நிகழ்த்தப்படுகின்ற பாஸ்காவும் தமிழகத்தில் உண்டு. ஆயினும் இங்கிருக்கும் கத்தோலிக்கத்தைக் 'தமிழ்க் கத்தோலிக்கம்' என்றும் சொல்லலாம். அதற்கான கூறுகள் அதிலுண்டு. தமிழ் கத்தோலிக்கத்தில் தமிழ் பாஸ்காவை அதாவது தமிழ்ப் பண்பாட்டுடன் கூடிய பாஸ்காவைப் பார்க்கமுடியும்.

தமிழ்நாட்டில் மூன்று சமய நெறிகள் இருக்கின்றன. அவற்றில் இரண்டு சமய நெறிகள் நமக்குத் தெரியும். சைவம், வைணவம் இவையிரண்டும் இணைக்கப்பட்டு 'இந்து சமயம்' என்ற அடையாளம் சூட்டப்பட்டுள்ளது. ஆனால் இந்த மத எல்லைக்குள் வராமல் வேறு ஒரு சமய நெறியும் மக்கள் பயன்பாட்டிலிருக்கின்றது. அந்நெறிக்கு மக்களால் பெயரிடப்படவில்லை. ஆயினும் அதனை 'நாட்டார் சமயம்' அல்லது 'நாட்டுப்புறச்சமயம்' என்று பெயரிட்டு ஆய்வாளர்கள் அழைக்கின்றனர். கிறித்தவத்தைப்போல இசுலாமியத்தைப் போல ஒரு பிரிவினர் நாட்டுப்புறச் சமயம் என்றவொன்றைப் பின்பற்றி வருகிறார்களா என்றால் அஃது அப்படியில்லை. நாட்டுப்புறச் சமயம் என்பதை ஆய்வாளர்கள் 'மக்களின் (வெகுஜனங்களின்) இந்து மதம்' என்று குறிப்பிடலாம் என்கின்றனர். அதைப் போலவே கிறித்தவத்திலும் இசுலாத்திலும் 'மக்கள் கிறித்தவம்', 'மக்கள் இசுலாம்' என்ற கலைச்சொற்கள் புழங்குகின்றன. அதேபோன்று 'மக்கள் (வெகுஜனக்) கத்தோலிக்கம்' என்று அழைக்கலாமே ஏன் தமிழ்க் கத்தோலிக்கம் என்று சொல்ல வேண்டும் எனக் கேட்கலாம். இங்கு நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால் தமிழர்களில் மிகப் பெரும்பாலானோர் சைவர்களாக இருந்தாலும் வைணவர்களாக இருந்தாலும் அவர்கள் நாட்டார் சமயத்திற்கு ஆட்பட்டவர்களாகவே உள்ளனர்.

அந்த நாட்டார் தெய்வங்களைச் சைவ, வைணவச் சமயத்தின் நெறிமுறைகளுக்கு மாறுபட்ட முறையிலே வணங்கி அதையும் தழுவி நிற்கின்றார்கள். இவ்வகையிலே பார்த்தால் தமிழ்ச் சைவர்களும் தமிழ் வைணவர்களும் இரட்டைச் சமயவாழ்க்கை வாழ்கின்றனர் என்று சொல்லலாம். ஒருபக்கம் அவர்கள் சைவர்களாக விளங்குகின்றார்கள், மற்றொருபக்கம் நாட்டுப்புற வழிபாடுகளில் ஈடுபடுகின்றவர்களாக இருக்கின்றார்கள். இந்த ஒரு பண்பு தமிழ்ச் சைவ வைணவர்களின் தனித்துவமான அடையாளம் என்று சொல்லலாம். ஆனால்

இன்று இது மறைக்கப்பட்டு வரக்கூடிய உண்மை. இது தனியாக ஆராய வேண்டிய ஒன்று.

இந்த வகையிலே கத்தோலிக்கத்தையும் இரட்டைச் சமய வாழ்க்கை என்ற ஒரு அடையாளத்திற்குள் அடக்குவதற்கான சில கூறுகள் இருக்கின்றன. முதலில் குறிப்பிட்டது போலக் கத்தோலிக்கம் என்பது தனித்துவமான அடையாளங்களைக்கொண்ட ஒரு சமயம். ஆயினும் கத்தோலிக்கர்கள் அவர்களின் சமயத்திலிருந்து சற்று விலகுவதுபோன்ற ஒரு தோற்றத்தில் சில வழிபாட்டு நெறிகளையும் நம்பிக்கைகளையும் கொண்டு விளங்குகின்றனர். இந்த வழிபாட்டு நெறிமுறைதான் தமிழ் அடையாளம் என்கின்ற ஒன்று. இதைத்தான் மக்கள் (வெகுஜனக்) கத்தோலிக்கம் என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கத்தோலிக்கமும் சைவ, வைணவத்தைப் போன்றே இறுக்கமான ஆகமவிதிகளை வழிபாட்டு முறைகளில் கொண்டிருக்கின்றன. கத்தோலிக்க வழிபாட்டுத் திருவிழாக்கள் சில நெறிமுறைகளின் படியே நடத்தப்படுகின்றன. அவற்றைவிட்டு விலகாமல் நடப்பதுதான் கத்தோலிக்கர்களது கடமை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். என்றாலும், தம் வழிபாட்டுத்தலத்திலும் அதற்கு வெளியிலும் அந்த இறுக்கமான விதிமுறைகளிலிருந்து சற்று விலகி ஒரு நெகிழ்ச்சியான தன்மையுடன் இயங்குகின்றனர் என்பதும் உண்மை. இதுதான் தமிழ்க் கத்தோலிக்கம் என்று சொல்வதற்கான காரணமாக அமைகின்றது.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் அறிமுகமான கத்தோலிக்கமும் இத்தகைய நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டதாகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளது. சராசரி கத்தோலிக்கர்களின் சமய வாழ்விலும் வாழ்க்கைவட்டச் சடங்குகளிலும் மரபுவழித் தொழில்களிலும் நம்பிக்கைகளிலும் இது வெளிப்படுகின்றது. இவை பெரும்பாலும் அடித்தள மக்களின் நாட்டார் சமய மரபுகளைஉள்வாங்கியவை. தொடக்கத்தில் கத்தோலிக்கர்களாக மாறியவர்கள் பெரும்பாலும் ஆதிக்கச் சாதியைச் சார்ந்தவர்கள் அல்லர். அவர்கள் இடைநிலைச் சாதியையும் தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்ட சாதியையும் சார்ந்தவர்களாகவுமே பெரும்பாலும் இருந்தனர். இவர்கள் கோவில்களினுள்ளே நுழைவதற்கும் வழிபாடுகளிலே கலந்து கொள்வதற்கும் உரிமையற்றவர்களாகவே வைக்கப்பட்டிருந்தனர்.

ஆகவே இவர்கள் இந்து சமயத்திலிருந்து முற்றுமாகத் தன்னைத் துண்டித்துக் கொண்ட நாட்டார் சமய மரபில் ஊறிப்போயினர். இவர்கள் கத்தோலிக்கர்களாக மாறியபோது நாட்டார் சமய முறைமைகளை உள்வாங்கிய கிறித்தவத்தையே முன்னெடுத்தனர். இவ்வாறு தமிழர்கள் கைக்கொண்ட கத்தோலிக்கமானது நாட்டார் சமயநெறியின் தாக்கத்திற்கு ஆட்பட்ட காரணத்தால் இதனைத் 'தமிழ்க் கிறித்தவம்' என்று சொல்வது பொருத்தமாக இருக்கின்றது. ஐரோப்பியர்கள் வாயிலாக இங்குப் பரவிய கத்தோலிக்கமானது தமிழரின் மண் சார்ந்த சமயப் பண்பாட்டு வாழ்வியல், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றை உள்வாங்கிக்கொண்டுள்ளது. இதைத்தான் மானுடவியலாளர்கள் 'பண்பாட்டு ஏற்றல்' (Inculturation) என்கின்றனர்.

இந்த அடிப்படையில்தான் பாஸ்கா தமிழ்ப் பண்பாட்டுப்பெறுமானங்களோடு இருக்கின்றது என்பதை அறியமுடிகின்றது. பாஸ்கா என்பது சாவுடன் கூடிய ஒரு நிகழ்த்துகை. இயேசுவின் இறப்பு இங்கு முதன்மையாகப் பேசப்படுகின்றது. தமிழர்களின் வாழ்வில் சாவு என்பது நிறையச் சடங்குகளைக் கொண்டதாக இருக்கின்றது. இச்சடங்குகளைக் கத்தோலிக்கப் பாஸ்காவிற்குள்ளும் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றனர். அவர்கள் பாஸ்காவை வெறும் நிகழ்த்துகையாகப் பார்க்காமல் உணர்வுடன் சேர்த்துப்பார்க்கின்றனர். தங்கள் பண்பாட்டுப்பெறுமானங்களை

அதில் இணைத்து அதற்கு ஒரு புதுவடிவம் கொடுத்திருக்கின்றனர். அவ்வாறான பண்பாட்டுப் பெறுமானங்களைப் பார்ப்பதன் மூலம் பாஸ்கா ஒரு தனித்த தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுடனான வடிவம் என்பது இங்குப் புலப்படும்.

### நோன்பிருத்தல்

பாஸ்கா நாடகம் சிறப்பாக நடைபெற அதில் நடிக்கின்ற நடிகர்கள், நடப்பிப்போர், அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் என அனைவரும் நாற்பது நாட்கள் நோன்பிருப்பது என்பது முக்கியமான நிகழ்வாகும். நல்ல பண்பும் ஒழுக்கமும் உள்ள ஒருவர்தான் இயேசுவாக நடிக்க வேண்டுமென்று இடைக்காட்டூரிலுள்ள மக்கள் விரும்புகின்றனர். இவ்வாறே இயேசுவாக நடிப்பவர்கள் ஒழுக்கமுடையவர்களாக இருக்கவேண்டுமென்று பல ஊர்களிலும் எதிர்பார்க்கின்றனர். குறிப்பிட்ட ஒருவர் தான் காலம்காலமாக இயேசுவாக நடிப்பது தொடர்கின்ற முறைமையையும் இதனூடாகப் பார்க்க முடிகின்றது. திண்டுக்கல் பஞ்சம்பட்டியில் இயேசுவாக நடிப்பவரின் முகத்தை ஒருநாளும் அவர்கள் காட்டியதில்லை. இயேசுவின் முகமுடி அணிந்தே அந்தப் பாத்திரத்தில் அவர் நடிப்பார். முகம் காட்டாமல் நடிக்கின்றபோதும் அவர் புனிதமானவராக இருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். பசுமலையில் மூன்று பேர் இயேசுவாக நடிக்கின்றனர். அதில் கல்லில் கட்டி அடிக்கின்ற பாத்திரத்தை ஏந்துபவர் வெள்ளி அன்று முழுநேரமும் உணவருந்தாமல் விரதம் இருக்கின்றார். கல்லில் கட்டி அடிக்கும் போது உண்மையாக அவர் அடிவாங்குகின்றார். அதனால் அவர் அவ்வாறு விரதமிருந்து அச்செயலைச் செய்கின்றார். விரதமிருந்து தன்னை வருத்திக்கொள்ளல் என்கின்ற பண்பாடு தமிழ்ப் பண்பாட்டில் மிகுதியாகவே இருக்கின்றது.

### ஒன்றுகூடி செபம் செய்தல்

கிராமிய ஆட்டக்கோலங்கள் அனைத்திலுமே வழிபாடு நடத்திவிட்டு ஆற்றுகையைத் தொடங்குவது என்பதே நடைமுறையாக இருக்கின்றது. வழிபாடு நடத்திவிட்டு நெற்றியில் அரிதாரத்தால் பொட்டுவைத்தல், திருநீறுபூசுதல் என்ற மரபு உண்டு. இதைப்போலவே பாஸ்காவிலும் பார்க்கமுடியும். பாஸ்கா தொடங்குமுன்னர், இயேசு சிலுவைப் பின்னணியில் நிற்றல், சிறுமிகள் எரியும் மெழுகுவர்த்தியுடன் நிற்றல், தூபப் புகை காட்டடல், மலர் தூவுதல் ஆகிய காட்சிகள் காட்டப்படும். அந்தக் கோவிலின் பாதிரியார் செபம் சொல்லி நாடகத்தைத் தொடங்கிவைப்பார். தூபம் காட்டடல், மலர் தூவுதல் ஆகிய வழிபாட்டுமுறைகள் இந்து மரபிற்குரியவை. இவை கிறித்தவ நாடகத்தில் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

பசுமலையில் நாடகம் தொடங்குவதற்கு முன்னர் ‘நாம் எல்லோரும் ஒன்றுகூடி ஜெபம் செய்வோம்’ என்பார் பாதிரியார். ஜெபம் செய்தபிறகு முதல் நிகழ்ச்சியாகப் பாடற்குழுவினர் கைகளில் விளக்குகளை ஏந்திக்கொண்டு பாடுகின்றனர். தொடர்ந்து பார்வையாளர்களும் சேர்ந்து பாடுகின்றனர். இந்நிகழ்வு நமக்கு மரபார்ந்த வழிபாட்டு உணர்வையே தருகிறது.

இலங்கையில் மன்னார் பேசாலை, யாழ் திருமறைக் கலாமன்றம், மட்டக்களப்பு என்று எல்லா இடங்களிலும் ‘இது நாடகமல்ல, இதனை இயேசுவின் வழிபாடாகவே பார்க்க வேண்டும்’ என்ற உணர்வோடு பாஸ்காவின் தொடக்கத்தில் பாதிரிமார்கள் பேசுகின்றனர். செபம் நடத்துகின்றனர். அதன்பின்பே ஆற்றுகை தொடங்குவதாக இருக்கின்றது.

### நேர்த்தி செலுத்துதல்

காணிக்கை செலுத்துதல் என்பது உலகம் முழுவதும் இருக்கின்ற நடைமுறை என்றாலும், தமிழ்ப் பண்பாட்டு முறைமையில் அதன்

தனித்துவத்தைப் பார்க்கமுடியும். இந்தத் தனித்துவத்தைப் பாஸ்கா ஆற்றுகைச் சடங்கிலும் பார்க்க முடிகின்றது.

பாஸ்காவின் முதல்நாள் ஆற்றுகையானது இயேசு சிலுவையில் அறையப்பட்டு உயிர் நீத்ததும் முடிவடையும். (பாஸ்கா ஆற்றுகை இரண்டு இரவுகளையும் ஒரு பகலையும் கொண்டதான மூன்று நாள்கள் கொண்ட ஆற்றுகையாகவே இருந்தது. பின்னர் பல இடங்களில் இப்போது ஒரு இரவாகச் சுருக்கப்பட்டு இருக்கின்றது.) அந்த உயிர்நீத்த இயேசுவை மேடையில் அப்படியே வைத்து விடுவர். ஆற்றுகை முடிந்ததும் மக்கள் தங்கள் நேர்த்தியைச் செலுத்துகின்றனர்.

குழந்தையை இயேசுவின் பாதத்தில் வைத்து ஏலம்விட்டு அந்த ஏலத்தொகையைக் காணிக்கையாகச் செலுத்துவர். பணம், வேட்டி, பொரி, பூக்கள், ஆடு, கோழி ஆகிய பொருள்களையும் காணிக்கையாகச் செலுத்துவர். பலர் மெழுகுவர்த்தி ஏற்றிவைப்பர். இந்த முறைமை பரவலாக எல்லா இடங்களிலும் பேணப்பட்டு வருகின்றது.

மேட்டுப்பட்டி, ஆலூர் ஆகிய இடங்களில் உயிர்நீத்த இயேசுவை ஆசந்தியில் (பாடையில்) ஊர்வலமாகக் கொண்டு செல்லும் போது நேர்த்திக்காகச் சிறுவர்களை அந்த ஆசந்திக்குக் கீழாகக் குறுக்கறுத்துச் செல்லவைப்பர். அந்த உயிர்நீத்த இயேசுவின் மேல் (சொரூபமே இங்குப் பயன்படுத்தப்படும். சிலுவையில் அறைவதற்கும் உயிர் நீத்த இயேசுவாகக் கொண்டு செல்லப்படுவதற்கும் இன்னும் பல இடங்களில் சொரூபத்தையே பயன்படுத்துகின்றனர்.) பூ மாலைகள், பொரி, வேட்டிகள் என அவரவர் விரும்பிய பொருள்களைஎறிவர். பலர் அந்த ஆசந்திக்கு அருகிலிருந்து அதற்குள் போடுவார்கள். பட்டுத்துணிகள் வெள்ளைத்துணிகள் என்று அவரவர்கள் வசதிக்கேற்ப நேர்த்தியைச் செய்கின்றனர்.

ஆசந்தியை நேர்த்திக்காகத் தோளில்வைத்து இளைஞர்களும் ஆண்களும் தூக்கிச் செல்வதும் வழக்கம். இவ்வாறான ஆசந்தி ஊர்வல நேர்த்திகளை ஆலூர், இடைக்காட்டூர், சருகணி, மேட்டுப்பட்டி, பஞ்சம்பட்டி ஆகிய பல ஊர்களில் பார்க்கமுடியும்.

**ஒப்பாரி பாடுதல்**

இடைக்காட்டூரில் இரண்டாம் நாள் பாஸ்காவில் ஒப்பாரி பாடும் நிகழ்வு இடம்பெறுகின்றது. இயேசுவின் தாய் மரியாள், மரிய மகதலேனாள், புனித இராயப்பர் ஆகிய மூவரும் இயேசு இறந்த துக்கத்தை நினைத்துப் பாடலாகப் பாடுகின்றனர். இவ்வாறு இவர்கள் பாடியதாக விவிலியத்தில் குறிப்புக்கள் இல்லை. இறந்தவர்கள் வீட்டில் ஒப்பாரி பாடுவது என்பது தமிழர்களது பண்பட்டில் இருக்கின்ற ஒரு விடயம். இவ்வாறு தங்கள் வாழ்வியலோடு கலந்த பல விடயங்களைப் பாஸ்காவினுள் பிரதிபலிக்கவைத்துள்ளனர்.

மன்னாரில் பல இடங்களில் பாஸ்கா தடைசெய்யப்படுகிறது. ஆயினும் அப்பகுதியில் வாழும் மக்கள் புனிதவெள்ளியன்று பாஸ்காவைக் கைவிட்டாலும் ஒப்பாரி பாடுவதைக் கைவிடவில்லை. மன்னார் மாந்தைப்பகுதியில் உள்ள பரப்பான் கண்டல் பரலோக மாதா ஆலயத்திலும் அதன் சுற்றுவட்டாரங்களிலுள்ள பல தேவாலயங்களிலும் ஒப்பாரி பாடுவது என்பது இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதேபோலக் கன்னியாகுமாரி மாவட்டம், துத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் பாஸ்கா தடை செய்யப்பட்ட பின்னும் ஒப்பாரி பாடுவது என்பது இன்றும் நடைமுறையில் உள்ள வழக்காகவே இருக்கின்றது.

சில இடங்களில் ஒப்பாரியைப் பசான் வாசித்தல் என்றும் அழைக்கின்றனர். வியாகுலப் பிரசங்கத்தைப் படித்தலே பசான் வாசித்தல் என்கின்ற முறைமையாகக் கொள்ளப்படுகின்றது. கத்தோலிக்கக் கிறித்தவர்கள் கைக்கொண்டுள்ள ஒப்பாரி,

பசான், சிந்து ஆகிய வடிவங்களுக்கு அடிப்படையாகப் வியாகுலப் பிரசங்கத்தையே கொள்ளமுடியும். வியாகுலப் பிரசங்கத்தைப் பிரதியாகக் கொண்டே உடக்குப்பாஸ்கா நிகழ்த்துவர். இந்த உடக்குப்பாஸ்காவை நிகழ்த்த முடியாத தேவாலயங்களில் இதைப்பாடும் முறைமையை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். சில இடங்களில் சிந்து பாடுதல் என்றும் அதை அழைக்கின்றனர். காவடிச்சிந்து பாடி காவடி தூக்கிச் செல்லுதல் என்ற நடைமுறை முருக வழிபாட்டில் உண்டு. அதேபோலச் சிலுவைகளைச் சுமந்து சென்று சிந்து படித்தல் நடைமுறை கன்னியாகுமரியில் காணப்படுகிறது. கல்லறைச் சிந்து என்றும் அதைக் கூறுகின்றனர். ஒப்பாரி, சிந்து, அம்மானை ஆகிய தமிழ்ப் பண்பாட்டு, இலக்கிய வடிவங்கள் பாஸ்காவோடு கலந்திருப்பதைப் பார்க்க முடிகின்றது.

## தேர் இழுத்தல்

1925க்கு முன்னர் சருகணியில் (சிவகங்கை மாவட்டம்) உயிர்நீத்த இயேசுவின் சொரூபத்தைத் தேரில் வைத்துப் பவனி வரும் நிகழ்ச்சி ஊரில் முக்கிய சடங்காக - பெரிய விழாவாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இவ்வூர்வலத்திற்கு இந்து மறவர்கள் முக்கிய விருந்தினர்களாக அழைக்கப்பட்டதாகத் தெரிகின்றது. சிவகங்கையை மருது சகோதரர்கள் ஆண்டபோது ஆபத்துக் காலத்தில் சருகணி ஆலயத்தில் மறைந்திருந்து தப்பித்துள்ளனர். அதற்கு நன்றிக்கடனாகத் தேர் செய்வதற்கு நன்கொடை கொடுத்துள்ளனர். அவர்கள் நினைவாக உயிர்த்த பாஸ்கா விழாநாளில் தேர் இழுக்க மறவர்களை அழைத்தனர். அவர்கள் வந்து தொட்டுக்கொடுத்த பின்னரே தேர் இழுக்கப்பட்டுள்ளது. மறவர்களை வரவேற்க அண்டா நிறைய சந்தனம் கரைத்து, அவர்கள்மீது பூசி, வெற்றிலை பாக்குப் பணம்கொடுத்து வரவேற்றுப் பின்னரே தேர் இழுத்துள்ளனர். (காந்திமேரி. எம். எஸ்., 1992)

தமிழ்நாட்டிலுள்ள தேவாலயங்களிலே ஆவூரில்தான் இன்றும் மிகப்பெரிய தேர் இருக்கின்றது. அங்குப் பாஸ்கா ஆற்றுகை முடிவடைந்து இயேசு உயிர்த்தபின் உயிர்த்த ஆண்டவரைத் தேரிலேற்றி ஊர் முழுவதும் உலா வருவர். அன்றைய பொழுதைத் தேர்த் திருவிழாவாகவே அவ்வூர் மக்கள் கொண்டாடுகின்றனர். காலை ஒன்பது மணிக்குத் தொடங்கும் தேருலாவானது மாலையில்தான் முடிவடையும். இந்தத் தேரிழுப்பில் சுற்றுவட்டாரங்களிலுள்ள ஊர்மக்கள் பங்கேற்கின்றனர். பலர் நேர்த்தி செலுத்துகின்றனர். மாலைகள் போடுவதும், புதிய துணிகளைக் காணிக்கையாக அத்தேரில் தூக்கிப் போடுவதுமான காட்சிகளைக் காணலாம். திருமணம் நடைபெற வேண்டியும், குழந்தைப்பேறு வேண்டியும் அதிகமான நேர்த்தி இங்கு வைக்கப்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

இடைக்காட்டூரில் பாஸ்கா முடிந்ததும் உயிர்த்த இயேசு விடியற்காலையில் வந்ததும் வண்ண விளக்குகள் கொண்ட பல தேர்களை உருவாக்கி உலா வருகின்றனர். அதை அவர்கள் சப்பரம் (சிறுதேர்) என்று அழைக்கின்றனர். இதன் அழகு மிக நேர்த்தியானது. இதே போலப் பஞ்சம்பட்டியிலும் பார்க்கமுடியும். இயேசுவின் சப்பரம் முன்செல்ல மாதா, அப்போஸ்தலர்கள் (சீடர்கள்), புனிதர்கள் ஆகியோரின் சப்பரங்கள் பின்செல்ல பல சப்பரங்கள் வீதியெங்கும் உலா வருகின்றன.

## மரணச் சடங்கு

ஆசந்தி கொண்டு செல்லும்போது மன்னாரில் (இலங்கையின் வடக்கில்) தென்னம்பிள்ளையைத் தானமாகக் கொடுக்கின்றதைப் பார்க்கமுடிகின்றது. தமிழர் மரபில் சனிக்கிழமைகளில் இறந்தவரின் உடலை அடக்கம் செய்யமாட்டார்கள். அவ்வாறு அடக்கம் செய்வதாயின் ஒரு தென்னம்பிள்ளையைக் கொண்டுசென்று தேவாலயத்தில் ஓரிடத்தில் நட்டுவிடுவர். அவ்வாறு செய்வதன்மூலம் அந்தக்

குடும்பத்திற்குள் இன்னோர் இறப்பு வராது என்பது நம்பிக்கை. இல்லாவிட்டால் குறுகிய காலத்திற்குள் இன்னோர் உயிர் காவுகொள்ளப்படும் என்று நம்புகின்றனர். இயேசுவின் அடக்கமும் சனிக்கிழமை நடைபெறுவதால் தென்னம்பிள்ளையைக் கொடுக்கின்ற மரபு இதனோடும் ஒட்டிக் கொண்டது. இங்குத் தென்னம்பிள்ளை என்பது ஒரு பிள்ளையாகப் பாவிக்கப்படுகிறது.

அதேபோல் இயேசுவின் இறந்த உடலைச் சிலுவையில் இருந்து இறக்கியபின்பு தூம்பாவில் (பாடையில்) சுமந்து மிகவும் பக்தியுடன் கையில் மெழுகுவர்த்திகளைத் தாங்கிய வண்ணம் உருக்கமாகத் துக்கப் பாடல்களைப் பாடிக்கொண்டு ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஊர்வலமாகச்சென்று ஊரைச் சுற்றி வருவார்கள். இங்கு ஒப்பாரி பாடுவார்கள். முன்னால் பெண்கள் செல்ல, இடையில் இறந்த உடலைச் சுமந்துவர ஆண்கள் பின்னால் தொடர்ந்து வருவார்கள். அவ்வேளையில் உப்பு, பொரி ஆகியவற்றை எறிவார்கள். பரிமளத்தைலம் இயேசுவிற்குப் பூசியதை நினைவுபடுத்தும் வகையில் வாசனைத் திரவியங்களைத் தெளிப்பார்கள். இவ்வாறான காட்சிகள் தமிழர்கள் மத்தியிலுள்ள இறுதி ஊர்வலத்தை நினைவூட்டுகின்றன.

இடைக்காட்டூரில் இறுதி ஊர்வலத்திற்காக வருடந்தோறும் புதிய ஆசந்தி வண்டியைப் பச்சைமரங்களை வெட்டிச் செய்கின்றனர். உயிர் நீத்த இயேசுவை அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக எடுத்துச் சென்று ஆலயத்தினுள் வைத்த பின்னர், அவ்வண்டியை மக்கள் உடைத்து ஒவ்வொருவரும் சிறிய துண்டுக்கட்டையைப்புனிதப்பொருளாகப் எடுத்துச்சென்று வீடுகளில் வைக்கின்றனர். இவ்வாறான பலமுறைமைகள் தமிழர் பண்பாட்டிலுள்ள வழிபாடுகளில் பார்க்கமுடியும்.

முதல்நாள் பாஸ்கா ஆற்றுகை முடியும் போது அது வெறுமனே ஆற்றுகையாக - நாடகமாக அல்லாமல் மக்கள் பங்குபெறுகின்ற ஒரு சடங்காக மாறிவிடுகின்ற தன்மையை இங்குப் பார்க்கமுடிகின்றது. அவர்கள் உணர்வு பூர்வமாக இதில் பங்கெடுக்கின்றனர். தங்கள் பாவங்களுக்குப் பரிகாரம் தேடுகின்றனர். தங்கள் வேதனையையும் துன்பங்களையும் காணிக்கையாக்குகின்றனர். வாழ்வில் மீட்சியையும் வளர்ச்சியையும் பெற அதனை ஒரு வாய்ப்பாக நினைத்து அதில் கலந்துகொள்கின்றனர்.

ஆவூரில் ஆசந்தியை எடுத்துச்செல்லும் போது வெள்ளைத்துணியை விரித்து அதன் மேலே கொண்டுசெல்வர். தமிழர் மரபில் காணப்படும் இறுதி ஊர்வலத்தில் வெள்ளைத் துணி விரித்து அதன் மேல் இறந்தவரின் பாடையைக் கொண்டு செல்வதனை இன்றும் பல இடங்களில் காணலாம்.

பேசாலையில், பாஸ்கு முடிந்து ஆசந்தி எடுத்தபின் நாவிதன்மார்களுக்குக் காசு கொடுத்தல் என்ற நடைமுறை தொடக்கக் காலங்களில் பின்பற்றப்பட்டது. இறப்பு வீட்டுச் சடங்கின்போது நாவிதன்மார்களுக்குக் காசு கொடுத்தல் எனும் நடைமுறை இருந்தது. அதே நடைமுறை இயேசு சிலுவையில் இருந்து இறக்கப்பட்டு ஆசந்தி எடுத்து அவரைக் கல்லறையில் அடக்கம் செய்ததும் கோவிலில் நாவிதர்களுக்குப் பணம்கொடுத்தல் என்பது இருந்தது. இது பிற்பட்ட காலங்களில் முற்றாக அருகிவிட்ட ஒரு நிகழ்வாகப் போய்விட்டது. குறிப்பிட்ட அந்தச் சமூகம் பணம் வாங்குவதை மறுத்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

தமிழ்நாட்டின் பல கிராமங்களில் புனித சனி அன்று சாணி தெளித்துக் கோலம் போடுவதைத் தவிர்ப்பார்கள். வீடுகளில் யாரேனும் இறந்துவிட்டால் வாசலில் கோலம்போட மாட்டார்கள். அந்த நடைமுறையை இங்குப் பின்பற்றுகின்றார்கள். அதேபோல் அன்று அரிசிக் கஞ்சிச் சோறு மட்டும் உண்பார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள காமநாயக்கன்பட்டியில் புனித வெள்ளியன்று காலையில் இயேசுநாதர் சிலுவையில் அறையுண்ட நாளை

நினைவுகூர்வர். அனைவரும் ஒரு மடங்கு வேப்பிலைச்சாற்றினைப் பருகுவர். இது சிலுவையில் அறையப்படும் முன் கசப்புக் கலந்த திராட்சை இரசத்தை இயேசுவுக்குப் பருகக் கொடுத்ததை (மத்: 27,34) நினைவூட்டும் நிகழ்ச்சி என்று குறிப்பிடுகின்றனர். வீடுகளில் உணவு சமைப்பது கிடையாது. மொச்சை, தட்டைப்பயறு போன்ற பயிறு வகைகளை அவித்துண்பர். கரிசல் நிலப்பகுதிகளில் துக்கவீட்டில் நிகழும் செயலை ஊர்முழுவதும் மேற்கொள்வதன் வாயிலாக ஊரே துக்கத்தை ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்தப்படுகிறது.

அன்றைய நாள் சிலுவைப்பாதை முடிந்ததும் குருதி வடியும் நிலையில் காட்சியளிக்கும் இயேசுவின் உருவம் படுத்த நிலையில் பனை நார்க் கட்டில் ஒன்றில் வைக்கப்படும். இவ்வுருவம் ‘மரித்த ஆண்டவர்’ எனப்படும். தேரோடும் வீதிகளில் அமைதி ஊர்வலமாக மரித்த ஆண்டவரை எடுத்துச் செல்வர். பின்னர் ஆலயத்தினுள் திருப்பலிப் பூசை நிகழும். இதன் பின்னர் மரித்த ஆண்டவரை ஆலயத்தினுள் வைத்து ஆலயத்தை மூடிவிடுவர். ஞாயிறு அதிகாலையில் தான் ஆலயம் மீண்டும் திறக்கப்படும் அதுவரை ஆலயத்தினுள் வழிபாடு கிடையாது.

### தமிழ்ப் பாஸ்கா: அரசியல் - எதிர்அரசியல்

போர்த்துக்கேயர்கள் காலத்திலும் அதன் பின்வந்த கோவாவை மையப்படுத்திய ஒரற்றோறியன் குருமுதல்வர்களின் காலத்திலும் மக்களின் மரபுவழிப்பட்ட வழிபாட்டுச் சடங்குகளில் இருந்த முறைமைகளை அவர்கள் பின்பற்றினர். மக்களும் தங்களின் பண்பாடுகளைப் பாஸ்காவுடன் இணைத்துக் கொண்டனர். அவர்களது வாழ்வியலோடு அது கலந்திருந்தது. குறிப்பாக இயேசு சிலுவையில் அறையப்பட்டதும் முதல்நாள் ஆற்றுகை முடிந்ததும் அவர்கள் ஆற்றுகையுடன் இணைந்த சடங்குகளை நடத்தினர்.

தங்களின் நிறைவேறிய வேண்டுதல்களுக்காகவும் பாவங்களைப் போக்கிக்கொள்ள வேண்டுமென்றும் காணிக்கைகளைக் கொடுத்தனர். இந்த முறைமை தமிழ்ப்பண்பாட்டின் அடிப்படையிலிருந்தது. அதேபோல் இயேசு இறந்து தூம்பாவில் (பாடையில்) எடுத்துச் செல்வது முதல் உயிர்த்த இயேசு வரும்வரை அவர்கள் பல சடங்கு நடைமுறைகளைக் கடைப்பிடித்தனர். தங்களின் மரபுவழியிலான இறப்புச் சடங்குகளைப் பின்பற்றினர். இவற்றை எல்லாம் கத்தோலிக்கத் திருச்சபையின் பின்வந்த குருமுதல்வர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1940களின் பின்னர் இந்த மாற்றத்தைப் பார்க்க முடியும்.

குறிப்பாக வத்திகானின் ஆதிக்கம் அதிகரித்ததும் குருமுதல்வர்கள் எல்லோரும் ஆயரிடத்தில் பல முறைப்பாடுகளைச் செய்திருந்தனர். இவ்வழிபாட்டுச் சடங்குகள் கிறித்தவ வழிபாட்டுக்கு எதிராக இருப்பதாகக் கண்டனர். வத்திக்கான் சொல்கின்ற மேற்குமையப்பட்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட வழிபாட்டு முறைமைக்குள் கத்தோலிக்கர்களைக் கொண்டுவரவேண்டிய தேவை இருப்பதாக உணர்ந்தார்கள். அதனால் பல கட்டுப்பாடுகளையும் தடைகளையும் பாஸ்கா வழிபாட்டில் கொண்டுவந்தார்கள். அதனால் வலுவான திருச்சபை அதிகாரங்களுக்கு எதிராக மக்களால் செயல்படமுடியாமல் போனது. அதனால் பாரம்பரிய சடங்காசாரங்களைக் கொண்ட பாஸ்கா வழிபாட்டு முறைமைகளை மக்கள் கைவிடவேண்டி இருந்தது. பல ஊர்களில் நடைமுறையிலிருந்த சமுதாய அரங்காகத் திகழ்ந்த பாஸ்கா மரபு அற்றுப்போனது. பல இடங்களில் எதிர்த்துப் பலபோராட்டங்களும்நிகழ்ந்திருக்கின்றன.

மரபான பாஸ்கா முறைமை நீக்கப்பட்டுப் புதிய முறைமை உருவாக்கப்பட்டமை மக்கள் அதிகாரம் கொண்டு விளங்கிய பல இடங்களில் பாஸ்கா ஆற்றுகைச் செயற்பாட்டைத் திருச்சபையால் இடைநிறுத்த முடியவில்லை. திருச்சபையின் கட்டுப்பாடுகள்,

தடைகள், சீரமைத்தல் என்ற பல செயற்பாடுகளைத் திருச்சபை அதிகமாக முன்னெடுத்தது. அதன்பின்னர் அவர்களது பாஸ்கா ஆற்றுகைகளில் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கின. அதே நேரம் பல இடங்களில் முற்றாக நின்றும் போயின. பெரிய எழுச்சியாகவும் சமுதாய அரங்கச் செயற்பாடாகவும் இருந்த பாஸ்கா முறைமை அழிக்கப்பட்டு திருச்சபை அதிகாரங்களைத் தங்கள் கைக்குள் கொண்டுவந்தது. மக்கள் மைய அதிகாரக் குழுக்கள் நிராகரிக்கப்பட்டு குருமுதல்வர்களைத் தலைமையாகக் கொண்ட குழுக்கள் உருவாக்கப்பட்டுத் திருச்சபையின் அதிகாரங்கள் பங்குத் தந்தைக்கு மாற்றப்பட்டன.

மக்களிடம் இருந்த மரபாக முன்னெடுக்கப்பட்ட சடங்கார்ந்த வழிபாடுகள், கிறித்தவத்திற்கு மாறாக இருந்தவற்றை விலக்க எடுத்த முயற்சியின் பயனாக மேற்கத்திய நவீன நாடக முறைமைகளைக் கொண்ட அரங்க முறைமைகள் கொண்டு வரப்பட்டன. இவை பார்வையாளர்களையும் கலைஞர்களையும் தனிமைப்படுத்தின. அரங்க ஆற்றுகையாக மட்டுப்படுத்தியது. பக்தர்களை பார்வையாளர்களாக மட்டும் மாற்றியமைத்தது.

பெரிய அளவிலான மேடை அமைப்புக்கள், காட்சிப்படிமங்கள், மேடைப்பொருள்கள். மேற்கத்திய உடை ஒப்பனைகள், இசை, பாடகர்கள், வாத்தியங்கள் என எல்லாமும் மேற்குமயப்பட்டன. நடிகர்கள் உருவாகினார்கள். மேற்கத்திய நடிப்புமுறைமை உள்வாங்கப்பட்டது. இவ்வாறு மேற்கத்திய நவீன நாடகமுறைமை வந்ததும் பாஸ்கா ஒரு காட்சி வடிவமாக வெறும் ஆற்றுகை முறைமையாக ஆகிப்போனது. ஆற்றுகை முடிந்ததும் மக்கள் கலைந்து சென்றனர். பஸ்காவோடு இணைந்திருந்த சடங்குகள் நிறுத்தப்பட்டன. நடிகர்கள் பிரதிகள் பயிற்சிகள் எல்லாம் ஒரு குழுவினரின்பால் கொடுக்கப்பட்டு குருமுதல்வர் வழிநடத்து பவராக மாறிப்போனார். அதிகாரம் குருமுதல்வரின் கைகளுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது. நாடகப் பனுவலிலுள்ள ஒவ்வொரு விடயத்தையும் அவர் கண்ணுற்றார். பாடுகள் மட்டும் காட்சிப்படுத்தப்பட்ட பாஸ்காவில் இயேசுவின் பிறப்புப் போதனைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. ஊர் மக்கள் ஒன்றுகூடி சமுதாய அரங்காகத் தொழிற்பட்ட பாஸ்கா திருச்சபையின் கைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டு சமுதாய அரங்க முறைமை நீக்கப்பட்டு பாஸ்கா அரங்க ஆற்றுகையாக மாறிப்போனது.

ஆயினும் பாஸ்காவை நடத்திவந்த பல ஊர்கள் மாற்றங்களுக்கு எதிராக எதிர்ப்பைக் காட்டின. பல இடங்களில் பாஸ்காவே இல்லாமல் போனது. ஆனாலும் சில இடங்களில் மக்கள் தங்கள் அதிகாரங்களைத் தக்க வைத்துக்கொண்டனர். திருச்சபைக்கும் மக்கள் அதிகாரத்துக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டு இன்றும் மரபான பாஸ்கா ஆற்றுகையானது தமிழ்ப் பாஸ்காவாக - தமிழ்ப் பண்பாட்டுப் பெறுமானங்கள் கொண்டதாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டின் மேட்டுப்பட்டி, பஞ்சம்பட்டி (திண்டுக்கல்), ஆவூர் (புதுக்கோட்டை), இடைக்காட்டூர், சருகணி (சிவகங்கை) ஆகிய சில ஊர்களில் இதனைப் பார்க்க முடிகின்றது. கன்னியாகுமாரி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்கள் மரபான பாஸ்கா முறைமைகளில் ஈடுபட்டுவந்தனர். இப்போது அவ்விடங்களில் முற்றாக பாஸ்காப் பாரம்பரியம் இல்லாமலே போனது. இலங்கையில் பேசாலை மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இன்றும் பழைய பாஸ்கா முறைமையைப் பார்க்கமுடிகிறது. பேசாலையில் மட்டும் உடக்குப் பாஸ்காவை ஒவ்வொரு வருடமும் நடத்து வதில்லை. இறுதியாக நடத்தி ஐந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது.

### முடிவுகள்

பாஸ்கா என்பது இயேசுவின் பாடுகளைக் கூறுகின்ற ஒரு நாடக வடிவம். இது போர்த்துக்கேயர்களின் காலத்தில் தமிழர்களிடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பாஸ்கா என்பதைத் தமிழில் 'திருப்பாடுகளின் காட்சி' என்கின்றனர். "Pascha' என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து 'பாஸ்கா' என்னும் சொல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் இதை "Passion Play' என்று அழைக்கின்றனர். இதனைப் 'பாசுக்குவை' என்றும் அழைக்கின்றனர். கிறித்தவ இறையியல் சிந்தனையின் அடிப்படையில் இதற்குத் 'தியானத்தின் பயிற்சி' என்று பொருள்.

பழைய ஏற்பாட்டின்படி பாஸ்கா என்றால் இஸ்ரேயல் மக்களின் விடுதலையைக் குறிக்கும். பாஸ்கா என்பதற்குக் 'கடத்தல்' (Pass over) என்று பொருள். எகிப்தியர்களிடமிருந்து இஸ்ரேல் மக்களை மோசே (மோயீசன்) என்பவர் விடுவித்துக் கடத்திச்சென்ற நிகழ்ச்சியைக் கடத்தல் என்கின்றனர்.

பாஸ்கா இயேசுவின் பாடுகளைச் சொன்னாலும் இவை சாவைப் பற்றிய துயரங்களைப் பேசுபொருளாகக் கொண்டவை. இந்நாடகங்களை நிகழ்த்திய தமிழர்கள் பாரம்பரிய வழிபாட்டுச் சடங்குகளைப் பின்பற்றுபவர்களாகவே இருந்தனர். அதனால்சாவின்போதுபின்பற்றப்படுகின்ற பாடை அமைத்தல், ஒப்பாரி வைத்தல் முதலான பல சடங்குகளையும், சாவு வீடுகளில் செய்யும் சாவுக்கடமைகளையும் நேர்த்திக்கடன்களையும் காணிக்கைகளையும் வேண்டுதல் வழிபாடுகளையும் சடங்கு வடிவங்களாக இந்நாடகங்களில் இணைத்திருந்தனர்.

பாஸ்காவை ஒரு நாடகமாக முன்னெடுக்காமல் சமுதாய அரங்காக மாற்றியமைத்தார்கள். தங்களுடைய மரபுவழிப்பட்ட நம்பிக்கைகளையும் சடங்குகளையும் அதில் இணைத்துக் கொண்டு அதைத் தமிழ்ப்பாஸ்காவாகக் கட்டமைத்தனர்.

தமிழகத்தில் பின்பற்றப்பட்டுவந்த பண்பாட்டு முறைமைகள் கிறித்தவத்தின் கலப்பால் புதியவடிவம் பெற்றன. அதே நேரத்தில் கிறித்தவச் சமயநெறிகளிலும் தமிழ்ப் பண்பாட்டின் சாயல்கள் தவிர்க்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்தின.

தமிழர்கள் கத்தோலிக்கர்களாக மாறிய போது நோன்பிருத்தல், ஒன்றுகூடி செபம் பண்ணுதல், ஒப்பாரி பாடுதல், தேரிழுத்தல், நேர்த்திக்கடன் கொடுத்தல், சாவுச் சடங்குகளைப் பின்பற்றுதல் போன்ற நாட்டார் சமய முறைமைகளை உள்வாங்கிய கிறித்தவத்தையே முன்னெடுத்தனர். இவ்வாறு தமிழர்கள் கைக்கொண்ட கத்தோலிக்கமானது நாட்டார் சமயநெறியின் தாக்கத்திற்கு ஆட்பட்ட காரணத்தால் இதனைத் 'தமிழ்க் கிறித்தவம்' என்று சொல்வது பொருத்தமாக இருக்கின்றது.

கத்தோலிக்கத் திருச்சபையின் பின்வந்த குருமுதல்வர்கள் தமிழர்களின் மரபுகளுடன் பின்னிப்பிணைந்திருந்த பாஸ்காவை ஏற்றுக்கொள்ளவில்லை. 1940களின் பின்னர் இதில் மாற்றத்தைச் செய்தனர். வத்திக்கான் சொல்கின்ற நிறுவனமயப்படுத்தப்பட்ட வழிபாட்டு முறைமைகளுக்குள் கத்தோலிக்கர்களைக் கொண்டுவர வேண்டிய தேவையிருந்ததால் பல கட்டுப்பாடுகளையும் தடைகளையும் பாஸ்கா வழிபாட்டில் கொண்டுவந்தனர். வலுவான திருச்சபை அதிகாரங்களுக்கு எதிராக மக்களால் செயல்படமுடியவில்லை.

அதனால் பல ஊர்களில் தமிழர்களின் சடங்குகளைக் கொண்ட பாஸ்கா வழிபாட்டு முறைமைகளை மக்கள் கைவிட்டனர். நடைமுறையிலிருந்த சமுதாய அரங்காகத் திகழ்ந்த பாஸ்கா மரபு அற்றுப்போனது.

ஆனால், பல ஊர்களில் சபையின் அதிகாரத்தை எதிர்த்துப் போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மக்களின் விருப்பமா சபையின் அதிகாரமா என்றநிலையேற்பட்ட போது சபை பணிந்தது. மக்களின்

விருப்பமும் உணர்வெழுச்சியினால் செய்யப்பட்ட போராட்டமும் வெற்றியடைந்தன. பொது மக்களுக்கும் கிறித்தவச் சபைக்குமிடையே எழுதப்படாத ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையேற்பட்டது. அதனால் தமிழ்நாட்டின் மேட்டுப்பட்டி, பஞ்சம்பட்டி (திண்டுக்கல்), ஆவூர் (புதுக்கோட்டை), இடைக்காட்டூர், சருகணி (சிவகங்கை) ஆகிய சில ஊர்களிலும் இலங்கையில் பேசாலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் இன்றும் மரபான பாஸ்கா ஆற்றுகையானது தமிழ்ப் பாஸ்காவாக - தமிழ்ப் பண்பாட்டுப் பெறுமானங்கள் கொண்டதாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

### உசாத்துணை


1. திரு விவிலியம், (2016) பழைய ஏற்பாட்டு நூல்கள், லேவியர் (லேவி): 23: 5-6, ப.165, Claretin Communications Chennai, Tamil Nadu.
2. மேலது, விடுதலைப் பயணம் (வி.ப.): 12: 21 - 23
3. மேலது,(2016)புதியஏற்பாட்டுநூல்கள், யோவான் நற்செய்தி (யோவா): 16: 41
4. சிவசுப்பிரமணியன். ஆ., (2007) கிறிஸ்தவமும் தமிழ்ச்சூழலும், வம்சி புக்ஸ், திரு வெண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா.
5. சிவசுப்பிரமணியன். ஆ., (2017) தமிழ்க்கிறித்தவம், நாகர்கோவில்.
6. காந்திமேரி. எம்.எஸ்., (1992) தமிழகத்தில் கிறிஸ்தவ நாடக அரங்குகளில் பாஸ்கா நாடகங்கள், முனைவர்பட்ட ஆய்வேடு, புதுவைப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி, இந்தியா.
7. திரு விவிலியம், (2016) புதிய ஏற்பாட்டு நூல்கள், மத்தேயு நற்செய்தி (மத்): 27,34, Claretin Communications Chennai, Tamil Nadu.